சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 140/2019

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 03ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு.கிஷோக் பாபு<br>த/பெ. கோவிந்தசாமி | நாள் 03.03.2026 |
| வயது. | தொழில் |
| கிராமம். | வட்டம். |

<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் மனுவில் மனுதாரர். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.1.** என்னுடைய விபத்துப் பதிவேட்டு நகல் **ம.த.சா.ஆ.2**. என்னுடைய வெளியேற்று சான்றிதழ **ம.த.சா.ஆ.3.** 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை, பதிவு சான்றிதழ், காப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் ஓட்டுநர் உரிமத்தின் நகல்கள் **ம.த.சா.ஆ.4 முதல் 7**. என்னுடைய ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள் **ம.த.சா.ஆ. 8 மற்றும் 9**. என்னுடைய ஊனச் சான்றிதழ் **ம.த.சா.ஆ.10**.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தின் போது எனக்கு 15 வயது. நான் அப்போது பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். எனக்கு அப்போது வீடு படாளம் அருகே உள்ள மாம்பட்டு கிராமத்தில் இருந்தது. விபத்து தேதியில் காலை 07.30 மணியளவில் மதுராந்தகம் பேருந்து நிறுத்தம் அருகே விபத்து ஏற்பட்டது. நான் சாலையைக் கடக்கும் போது விபத்து ஏற்பட்டது. விபத்தில் கால் மற்றும் கைகளில் அடிபட்டது. உடனே நான் மதுராந்தகம் அரசு மருத்துவமனை சென்றேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப் பட்டேன். அங்கு நான் இரண்டு நாட்கள் சிகிச்சை பெற்று வந்தேன். என்னுடைய மருத்துவ செலவின ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் தான் கவனக்குறைவாக சாலையைக் கடந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**